வர்கள் இங்கே வந்து படிக்கின்ற அளவுக்கு ஓரளவு தரம் உயர்ந்திருக்கிற காரணத்தால்தான் இங்கே வருகிறார்கள். பொதுவாக, ஏ.எம்.ஐ.இ. பரிட்சையின் முடிவு வருகிறபொழுது 100 பேர்கள் தேர்வு எழுதினால், 10 பேர்கள், 15 பேர்கள் கூடத் தேறுவதில்லை. ஆனால், சென்னை நகரில் 20, 25 சதவீதம் பேர்கள் தேறுகிற காரணத்தால், வெளியேயிருந்து இங்கே வந்து படிக்கிறார்கள்.

இன்னொன்று, வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் இங்கே வருவதற்குக் காரணம், உலகத்திலேயே தமிழ்நாடு ஒன்றுதான் கொஞ்சம் மலிவாக, இருப்பதற்கும் படிப்பதற்கும் ஏற்ற இடம்.

காஞ்சிபுரம் நகராட்சியைத் தேர்வுநிலை நகராட்சியாக்கும் திட்டம்.

373—(*வினா எண். 14430)—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முதல் நிலைநகராட்சியாக உள்ள (Special Grade) காஞ்சிபுரம் நகராட்சியைத் தேர்வுநிலை (Selection Grad) நகராட்சியாக மாற்றும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9–5–1983 நாளிட்ட அரசாணையின் மூலமாக, அரசு காஞ்சிபுரம் நகராட்சியை முதல் நிலையிலிருந்து தேர்வு நிலைக்கு உயர்த்த ஆணையிட்டுள்ளது.

கல்ராயன்மலை ஊராட்சி ஒன்றியம் அமைக்கும் திட்டம்.

374—(* வினா எண். 15082)—திரு. சோ. சவிதீர்த்தான் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியைச் சார்ந்த கல்ராயன் மலை ஊராட்சி ஒன்றியம் அமைத்துச் செயல்படாமல் போனது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ), கல்ராயன் மலை ஊராட்சி ஒன்றியம் இதுவரையில் அமைக்கப்படவில்லை. வருவாய் கிராமங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. இப்பணிகள் முற்றுப்பெற்றதும் ஊராட்சிகள்/ஊராட்சி ஒன்றியம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சுயவேலை வாய்ப்புப் பயிற்சிக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம்.

375—(*வினா 18016)—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) சுயவேலைவாய்ப்புப் பயிற்சிக்கு உதவித்தொகை வழங்கப்படுகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அந்த உதவித்தொகை உயர்த்தப்படுமா ?

(முற்பகல் 9—50)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) 1983 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் வரையில் பயிற்சி பெறுவோர் வசிக்கும் ஊரிலேயே பயிற்சி நடத்தப்பட்டால் மாதம் ரூ. 50 என்றும், பயிற்சி பெறுவோர் வசிக்கும் ஊர் அல்லாமல் வெளியூரில் பயிற்சி நடத்தப்பட்டால் மாதம் ரூ. 100 என்றும், பயிற்சி பெறுவோர் வசிக்கும் ஊர் அல்லாமல் வெளியூரில் பயிற்சி நடத்தப்பட்டு அந்தப் பயிற்சி நிலையத்தில் தங்கும் வசதி செய்யப்படாதிருந்தால் மாதம் ரூ. 125 என்றும், 1983 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திற்குப் பின் பயிற்சி பெறுவோர் வசிக்கும் ஊரிலேயே பயிற்சி நடத்தப்பட்டால் மாதம் ரூ. 75 என்றும், பயிற்சி பெறுவோர் வசிக்கும் ஊர் அல்லாமல் வெளியூரில் பயிற்சி நடத்தப்பட்டு அந்த பயிற்சி நிலையத்தில் தங்கும் வசதி இருந்தால் மாதம் ரூ. 150 என்றும், பயிற்சி பெறுவோர் வசிக்கும் ஊர் அல்லாமல் வெளியூரில் பயிற்சி நடத்தப்பட்டுத் அந்தப் பயிற்சி நிலையத்தில் தங்கும் வசதி செய்யப்படாதிருந்தால் மாதம் ரூ. 200 என்றும் கொடுக்கப்பட்டு வருகிறது.